








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள் (CURRENT AFFAIRS)

## ஆகஸ்ட் - 2019

*We Are Here..!! To Guide You..!!*











# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஆகஸ்ட் - 21.08.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்




- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- பாதுகாப்பு துறை செய்திகள்
- பொருளாதார செய்திகள்
- விளையாட்டுச் செய்திகள்






## தமிழக நிகழ்வுகள்

- **வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் அனைவருக்கும் வீடுகள் கட்டி தரப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.**
    - மத்திய அரசின் "பிரதமரின் ஆவாஸ் யோஜனா' திட்டத்தின் கீழ் நகர்புற மற்றும் கிராமப்புற மக்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படுகின்றன.
    - இத்திட்டத்திற்கு மத்திய அரசு 60%ம், மாநில அரசு 40%ம் செலவிடுகின்றன.
    - "பிரதமரின் ஆவாஸ் யோஜனா" திட்டம் 2022ம் ஆண்டுக்குள் 1 கோடி வீடுகள் கட்டுவதற்கு இலக்கு நிர்ணயித்துள்ளது.

## இந்திய நிகழ்வுகள்

- **மத்திய பிரதேச மாநில அரசு சட்ட மேலவையை உருவாக்கும் நடவடிக்கைகளை தொடங்கியுள்ளது.**
    - தற்பொழுது 6 மாநிலங்கள் மட்டுமே சட்ட மேலவையை கொண்டிருக்கின்றன.
    - மாநில மறுசீரமைப்பிற்கு முன்பு வரை ஜம்மு காஷ்மீர் மாநிலமும் சட்ட மேலவையை கொண்டிருந்தது.
    - சட்ட மேலவை உருவாக்கம் மற்றும் கலைத்தல் தொடர்பானது பற்றி அரசியலமைப்பு ஷரத்து 169 குறிப்பிடுகிறது.

- **மாநிலங்களுக்கிடையேயான ஆணையம் பிரதமரின் தலைமையில் மீண்டும் அமைக்கப்பட்டுள்ளது.**
    - அரசியலமைப்பின் ஷரத்து 263 மாநிலங்களுக்கிடையேயான ஒரு குழுவை ஏற்படுத்த முன்மொழிகின்றது.
    - மத்திய மாநில அரசுகளுக்கிடையேயான உறவு பற்றி ஆராய மத்திய அரசு 1983 ம் ஆண்டு சர்காரியா குழுவை

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

அமைத்தது.

- இந்த ஆணையத்தில் 6 மத்திய அமைச்சர்கள் மற்றும் அனைத்து மாநில முதலமைச்சர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

## பாதுகாப்பு துறை செய்திகள்

- **உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட விமானப் படைத் தளவாடங்களின் கண்காட்சி தில்லியில் ஆகஸ்ட் 20ம் தேதி நடைபெற்றது.**
  - பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கண்காட்சியை தொடங்கி வைத்தார்
  - இந்திய விமானப்படை தலைமை தளபதி பிரேந்தர் சிங் தனோவா ஆவர்.
  - “இந்தியாவில் தயாரிப்போம் திட்டம்” 2014 ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

## பொருளாதார செய்திகள்

- **புதிய வருமான வரி சட்ட வரைவு தொடர்பான பணி குழுவின் அறிக்கை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் சமர்பிக்கப்பட்டது.**
  - இவ்வரைவு குழுவின் தலைவராக அகிலேஷ் ரஞ்சன் செயல்பட்டார்.
  - வருமான வரிச்சட்டம் 1961 ஐ மாற்றி அமைப்பதற்காக இவ்வரைவுக் குழு அமைக்கப்பட்டது.

## விளையாட்டுச் செய்திகள்

- **சர்வதேச போட்டிகளில் பதக்கம் வெல்லக்கூடிய வீரர்களை உருவாக்கும் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் துரோணாச்சாரியார் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.**

  விருது பெறுவோர் :

1. பேட்மிண்டன் பயிற்சியாளர் விமல் குமார்
2. டேபிள் டென்னிஸ் பயிற்சியாளர் சந்தீப் குப்தா
3. தடகள பயிற்சியாளர் மொகிந்தர் சிங் தில்லான்.
    - விளையாட்டு துறை பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் விளையாட்டுத் துறையின் உயரிய விருதாகும்.

We Shine Academy™